DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். STC.99/2023

**prosecution witness: LW5 as PW-4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | முனியாண்டி | தொழில் | : சார்பு ஆய்வாளர், |
| த/பெ. | : | ராமு | வயது | : 57 |
| கிராமம் | : | இராமேஸ்வரம் | சமயம் | : இந்து |
| தாலுகா | : | இராமேஸ்வரம் | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>**19.06.2025**</u>

(1 வது எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

<u>**முதல் விசாரணை :-**</u>

நான் தற்சமயம் இளஞ்செம்பூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.07.2021ம் தேதி 13.45 மணிக்கு பாம்பன் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது எனக்கு கஞ்சா விற்பதாக கிடைத்த இரகசிய தகவலின் படி நானும், தலைக்காவலர் 1840 ரத்தினவேல், காவலர் சத்யேந்திரன் ஆகிய பார்ட்டி சகிதம் தேவையான உபகரணங்களுடன் புறப்பட்டு 14.00 மணிக்கு பாம்பன்இரயில்வே ஸ்டேசன் அருகில் ரோந்து சுற்றி வரும்போது மேற்படி இடத்தில் பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த தங்கச்சிமடம் மாந்தோப்பைச் சேர்ந்த ராயப்பன், த/பெ.அந்தோணிச்சாமி என்பவர் கையில் ஒரு பச்சை நிற பாலீத்தின் பையுடன் நின்று கொண்டிருந்தவர் போலீஸ் பார்டியாகிய எங்களைக் கண்டதும் ஓட எத்தனித்தவரை போலீஸ் பார்டி சகிதம் மடக்கி பிடித்தோம். பின்னர் அவரிடம் இருந்த பாலீத்தின் பையில் இருந்த கஞ்சாவை எடைபோட்டு பார்த்தபோது 80 கிராம் கஞ்சா இருந்தது.

மேற்படி சொத்தை அத்தாட்சியின் பெயரில் ரத்தினவேல், சத்யேந்திரன் காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றி நிலையம் கொண்டு வந்தோம். குற்ற எண்.185/2021, பிரிவுகள்.8(c), 20(b)(ii) NDPS Act படி வழக்கு பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். அத்தாட்சி அ.சா.ஆ.4** ஆகும்.

பின்பு அன்றைய தினமே எதிரியை கைது செய்து காவல்நிலையப் பிணையில் விடுவித்தேன். வழக்கு சொத்துக்களான 80 கிராம் கஞ்சாவில் தலா 10 கிராம் மாதிரிகள் எடுக்கப்பட்டது போக மீதமுள்ள 60 கிராமை படிவம்-95 மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். **படிவம்-95 அ.சா.ஆ.5 ஆகும்.** வட்டார தடய அறிவியல் அலுவலகத்திற்கு மேற்சொன்ன கஞ்சாவை நீதிமன்றத்திற்கு அனுமதி கடிதம் கொடுத்தேன். காவலர் குமார் மூலமாக அனுப்பட்டது. வட்டார தடய அறிவியல் பரிசோதனை அறிக்கையில் 1, 2 எண்ணிட்ட மாதிரிகள் கஞ்சா என்று அறிக்கை கொடுக்கப்பட்டது. அந்த **தடயவியல் பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.6** ஆகும். கோவிந்தராஜ், பகுப்பாய்வாளரை 10.11.2021ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் 60 கிராம் எடையுள்ள கஞ்சா பொட்டலம் மற்றும்

இரண்டு மாதிரி பொட்டலங்கள் என்னால் கைப்பற்றப்பட்டது. அவை முறையே அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அன்றைய தினமே புலன்விசாரணை முடித்து எதிரிமீது பிரிவுகள்.8(c), 20(b)(ii) NDPS Act படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

__எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–__

இரகசிய தகவல் எத்தனை மணிக்கு கிடைக்கப்பெற்றது என்றால் 13.45 மணிக்கு கிடைத்தது. காவல்நிலையத்தில் அன்றைய தினம் யார், யார்பணியில் இருந்தார்கள் என்றால் த.கா.1840 ரத்தினவேல், காவலர் 2022 சத்தியேந்திரன், 1595 ஜெயமுருகன் மற்றும் நான் இருந்தேன். காவல்நிலையத்திலிருந்து 13.45 மணிக்கு சம்பவம் இடம் நேரடியாக சென்றுவிட்டோம். யார், யார் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் அவரவரர் இருசக்கர வாகனத்தில் தனியாக சென்றோம். சம்பவ இடத்திற்கு 02.00 மணிக்கு சென்றுவிட்டோம். காவல்நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு செல்லும்போது தராசு, பேப்பர், கார்பன் ஆகியவை மட்டும தான் எடுத்து சென்றோம், வேறு எதுவும் எடுத்து செல்லவில்லை. தராசு எலக்ரானிக் வகை தராசு ஆகும், காவல்நிலையத்தில்வைத்திருப்போம்.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் அதிகமாக கூடும்பகுதி என்றால் சரிதான். பாம்பன் இரயில்வே ஸ்டேசனை சுற்றி சுமார் 60 கடைகள் இருக்கிறது என்றால் சரிதான். இரகசிய தகவல் கிடைத்தவுடன் எங்கு வண்டியை பாம்பன் இரயில்வே ஸ்டேசனில் உள்ள இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் நிறுத்தினோம். எதிரியை பாம்பன் இரயில்வே ஸ்டேசன் வளாகத்திலேயே பிடித்துவிட்டோம். நானும், போலீஸ் பார்டிகளும் சேர்ந்து எதிரியை பிடித்துவிட்டோம்.

சாட்சி சம்மனில் உள்ள கையெழுத்து மட்டும் தான் எனது கையெழுத்து ஆகும். சாட்சிகளாகிய காவலர்கள் இருவரையும் எந்த தேதி, எத்தனை மணிக்கு, எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து 02.00 மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி எங்களை பார்த்ததும் கிழக்கு பக்கமாக ஓட முயற்சித்தார். எவ்வளவு தூரமாக ஓடினார் என்றால் 10 அடி தூரத்தில் ஓடினார். இரயில்வே வளாகத்திற்குள் தான் எதிரி ஓடினார். காவலர் குமாரை எந்த தேதியில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் 10.11.2021ம் தேதியன்று விசாரித்தேன் எத்தனை மணி என்று எனக்கு ஞாபகம் இல்லை.

தடய ஆய்வாளர் கோவிந்தராஜை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் 10.11.2021ம் தேதியன்று 01.00 மணிக்கு விசாரித்தேன். தடய அறிவியல்சான்று வழங்கிய உதவி இயக்குநர் தங்கதுரையை விசாரித்து வாக்குமூலம்பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ காலகட்டத்தில் இதுபோன்ற கஞ்சா வழக்குகள் 5, 6 பதிவு செய்தேன் என்றால் நினைவு இல்லை அடிக்கடி பொய்யான கஞ்சா வழக்கு பதிவு செய்வேன் என்றால் சரியல்ல. அத்தாட்சியில் எந்த குற்ற எண்ணில் உள்ள பொருட்கள் கைப்பற்றியதாக இல்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து பணமோ, செல்போன் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் முதல் தகவல் அறிக்கையில் சார்பு ஆய்வாளர் என்று

கையொப்பம் செய்துள்ளதும், சாட்சிகள் குமார், கோவிந்தராஜ் வாக்குமூலத்தில் சார்பு ஆய்வாளர் என்று கையொப்பம் செய்துள்ளது மாறுபாடாக உள்ளது என்றால் சரிதான்.

சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்றாலும் சரியல்ல. பாம்பன்இரயில்வே நிலையம் மக்கள் அதிகமாககூடும் பகுதி உண்மையிலேயே சம்பவம் நடைபெற்றிருந்தால் பொதுமக்களை சாட்சியாக விசாரித்திருப்பேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த நேரம் 14.45 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியின் முகவரை யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் அவரிடம் தான் கேட்டு தெரிந்து கொண்டேன். நான் பகுப்பாய்வாளரையோ, மற்ற சாட்சிகளையோ விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழககில் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்தது நான் தான்.

பாம்பன்இரயில்வே நிலையத்திற்குள் எந்தவித குற்ற சம்பவமும் நடைபெற்றிருந்தால் எனக்கு வழக்கு பதிவு செய்ய அதிகாரமில்லை என்றால் சரியல்ல.

ஓம்/–S.B. Sujith, B.A.,B.L.,(Hons)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.